[திரு. டி. ஜெயக்குமார்.]

வகையிலே இங்கே 57 மீனவர்களுக்கு வழங்கப்படவில்லை என்று குறிப்பிட்டார்கள். கிட்டத் தட்ட அது இரண்டு பேருக்கு உடனடியாக வழங்கப்பட்டு, விசாரணை செய்யப்பட்டு, மீதம் உள்ள 30 பேர்களுக்கு அவர்களுக்கு வழங்கத் தயாராக இருந்தும் கூட, அந்த 30 பேர்கள் தங்களுடைய புகைப்படத்தைக் காண்பிக்காது, அதுவும் அலுவலகத்திற்குச் சென்று கேட்காத பட்சத்திலே அவர்களுக்கு வழங்கப்படவில்லை. அவர்களும் அந்த அலுவலகத்திற்குப் புகைப்படத்தோடு சென்றால், உடனடியாக ஒரு வார காலத்திற்குள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். சிங்காரம்: தலைவரவர்களே, இன்னொரு கேள்வி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. இன்றைக்கு ஒரு கேள்விதான் என்று நான் சொல்லி விட்டேன். நேரம் ஆகிவிட்டது. இரண்டு பேருக்கும் ஒரு கேள்வி என்று சொல்லி யிருக்கிறேன் அல்லவா ?

5. அறிக்கை அளித்தல்

மனுக்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மனுக்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கா. ப. பட்டாபிராமன், மனுக்கள் குழுவின் தலைவர்.

* திரு. கா. ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 1992-93-ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் பதினெட்டு, பத்தொன்பது, இருபது மற்றும் இருபத்தி ஒன்றாவது அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

போதிய அவகாசம் இன்மையால் இவ்வறிக்கைகளின் படி எடுத்த நகல்கள் சட்டமன்றப் பேரவை நூலகத்தில் உறுப்பினர்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. இவ்வறிக்கைகள் அச்சிடப்பட்டு கிடைக்கப் பெற்றவுடன் உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

6. அறிவிப்புகள்.

(அ) கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1993 (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன் வடிவுகள். பேரவைக்கு ஓர் அறிவிப்பு

பேரவைத் தலைவர்

1993ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

7. அரசினர் சட்ட முன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்).

(அ) கூடுதல் விற்பனைவரி (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன் வடிவுகள் அறிமுகம் செய்தல்.

1993ஆம் ஆண்டு தமிழ் நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய மாண்புமிகு வருவாய்த் துறைஅமைச்சர் அனுமதி கோருவார்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1993ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)
மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
மாண்புமிகு வருவாய் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

6. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) வேளாண் வருமான வரி (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1993 (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் வருமான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.